# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.138 /பேரூ/2023
நாள். 11.07.2023

திரு. இரா. மயில்சாமி,
மதுரை மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பரவை தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம் .... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா. மயில்சாமி என்பவரது 01.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.05.2023 அன்று பெறப்பட்டு, 138/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா. மயில்சாமி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" மதுரை மாவட்டம், பரவை பேரூராட்சிப் பகுதியில் உள்ள மங்கையர்கரசி கலை மற்றும் அறிவியல் பொறியியல் கல்லூரிகள், கல்வியியல் (B.Ed) கல்லூரிகள் மற்றும் டெல்லி பப்ளிக் ஸ்கூல் போன்ற கல்வி நிறுவனங்கள் நடைபெற்று வருகின்றன. இக்கட்டிடங்கள் கட்டிட அனுமதிக்கு கூடுதலாக சட்ட விதிகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது. மேற்படி கல்வி நிறுவனம், பொது பயன்பாட்டுக்கான O.S.R. இடம் அரசு விதிகளின்படி பேரூராட்சிக்கு கொடுக்கவில்லை. முறையாக நகர் ஊரமைப்பு துறையினிடம் அனைத்து கட்டிடங்களுக்கும் அனுமதி பெறவில்லை. மேலும், கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை சொத்துவரி, தொழில் வரி வசூலிக்கப்படவில்லை. இதனால் பரவை தேர்வுநிலை பேரூராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருகிறது.

மேற்படி கல்வி நிறுவன கட்டிடங்கள் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டியும் பொது பயன்பாட்டிற்கு O.S.R. இடம் விடாமலும் இன்று வரை சுமார் 9 ஆண்டுகளாக சொத்துவரி

செலுத்தாமல் இருந்து வரும் கல்வி நிறுவன கட்டிடங்களை அகற்றவும் (Remove) நகர் ஊரமைப்பு சட்டம் 1971 –பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடுதல் முத்திரையிடுதல் Lock and seal and demolition notice வழங்கி விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டிக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பரவை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) பரவை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 27.06.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மங்கையர்கரசி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தல ஆய்வு மேற்கொண்டு 2021 – 2022 முதல் 2023 – 2024 வரை கீழ்காணும் பட்டியல்படி சொத்து வரி ரூ. 23,23,825/– ஐ செலுத்த பரவை தேர்வுநிலை பேரூராட்சியின் 24.05.2023 நாளிட்ட நோட்டீஸ் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| வருடம் | சதுரடி (தரைத்தளம்) | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 2021–2022 | 42226 | 263951 |
| 2022–2023 | 42226 | 377072 |
| 2023–2024 | 42226 | 377072 |
| | மொத்தம் | ரூ. 10,18,095 |

| வருடம் | சதுரடி (முதல்தளம்) | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 2021–2022 | 27078 | 169261 |
| 2022–2023 | 27078 | 241802 |
| 2023–2024 | 27078 | 241802 |
| | மொத்தம் | ரூ.6,52,865 |

| வருடம் | சதுரடி (இரண்டாம் தளம்) | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 2021–2022 | 27078 | 169261 |
| 2022–2023 | 27078 | 241802 |
| 2023–2024 | 27078 | 241802 |
| | மொத்தம் | ரூ.6,52,865 |

மேற்கண்ட தொகையை இரண்டு மாத கால அவகாசத்திற்குள் இவ்வலுவலகத்தில் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வசூல் செய்யப்படும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், மேற்படி டெல்லி பப்ளிக் பள்ளி தலஆய்வு மேற்கொண்டதில் கீழ்கண்ட விபரப்படி தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளங்களுக்கு சதுரடிகள் அளவீடு செய்யப்பட்டு சொத்துவரி நிர்ணயம் செய்ய உள்ளது. 2022–2023ம் ஆண்டு சொத்து வரி சீராய்வின் போது கல்லூரிக்கு அளவீடு சேர்க்கப்பட்டுள்ளது. 2022–2023 முதல் 2023–2024 வரை சொத்துவரி செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே கீழ்கண்ட விபரப்படி தரைத்தளம், முதல்தளம், இரண்டாம் தளத்திற்கு சொத்து வரி செலுத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

| வருடம் | சதுரடி (துரைத்தளம்) | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 2022–2023 | 13881 | 123954 |
| 2023–2024 | 13881 | 123954 |
| | மொத்தம் | 2,47,908 |

| வருடம் | சதுரடி (முதல் தளம்) | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 2022–2023 | 12074 | 107820 |
| 2023–2024 | 12074 | 107820 |
| | மொத்தம் | 2,15,640 |

| வருடம் | சதுரடி (இரண்டாம் தளம்) | தொகை (ரூபாய் |
|---|---|---|
| 2022–2023 | 11947 | 106684 |
| 2023–2024 | 11947 | 106684 |
| | மொத்தம் | 2,13,368 |

மேற்படி டெல்லி பப்ளிக் பள்ளி தல ஆய்வு மேற்கொண்டு 2022–2023 முதல் 2023–2024 வரை சொத்து வரி ரூ. 6,76,918/–ஐ செலுத்த 13.06.2023 நாளிட்ட நோட்டீஸ் மூலம் தொகை செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை இரண்டு மாதகால அவகாசத்திற்குள் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வசூல் செய்யப்படும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

4) இம்முறைமன்ற 22.06.2023 நாளிட்ட அழைப்பானை மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு நாகர்கோயில் முகாமில் 28.06.2023 அன்று நடைபெறும் முறைமன்ற விசாரணையில் ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 28.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மதுரை மாவட்டம், பரவை தேர்வுநிலை பேரூராட்சிப் பகுதியில் பரவை மங்கையர்கரசி கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரிகள், கல்வியியல் (B.Ed) கல்லூரிகள் மற்றும் டெல்லி பப்ளிக் ஸ்கூல் போன்ற கல்வி நிறுவனங்கள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட கல்வி நிலையங்கள் இயங்கிவரும் கட்டடங்கள், கட்டட அனுமதிக்கு மாறாக விதிகளை மீறி கூடுதலாக கட்டப்பட்டுள்ளது.

மேற்படி கல்வி நிறுவனங்கள் பொது பயன்பாட்டிற்கான OSR இடம் அரசு விதிகளின்படி பேரூராட்சிக்கு கொடுக்கவில்லை. மேலும் மேற்படி கல்வி நிறுவன கட்டடங்கள்

ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து சுமார் 9 ஆண்டுகளாக சொத்துவரி செலுத்தாமல் தொழில் வரி வசூலிக்கப்படவில்லை. இதனால் பரவை தேர்வு நிலை பேரூராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் பேரூராட்சியின் மூலம் Stop work Noice / Notice calling for approved plan அறிவிப்பினையும், Lock and Seal and Demolition Notice வழங்கிடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

6) பரவை தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் 28 .06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பரவை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மங்கையர்கரசி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட கல்லூரி கட்டடத்திற்கான கட்டட வரைபட அனுமதி கல்லூரி நிர்வாகத்தால் முறையாக பெறப்படவில்லை. இது தொடர்பாக கல்லூரி நிர்வாகத்திற்கு Lock and Seal Notice மற்றும் De-occupation Notice விரைவில் வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 2021–2022 முதல் 2023–24 வரையிலான காலத்திற்கான சொத்து வரி ரூபாய் 23,23,825/–ஐ செலுத்தவேண்டி, 24.5.2023 அன்று நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதே போன்று டெல்லி பப்ளிக் பள்ளிக்கு 2022–2023 முதல் 2023–2024 வரையில் சொத்து வரியாக ரூ 6,76,916/– செலுத்தவேண்டி 13.6.2023 அன்று பரவை பேரூராட்சியால் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட வரி பாக்கியை இன்னும் 2 மாத காலத்தில் பேரூராட்சியால் வசூல் செய்யப்படும் என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பரவை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தமது 27.04.2023 நாளிட்ட மனுவில் பரவை மங்கயர்கரசி கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரி, கல்வியியல் கல்லூரி மற்றும் டெல்லி பப்ளிக் ஸ்கூல் போன்ற கல்வி நிறுவனங்கள், கட்டட அனுமதிக்குமாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டு இயங்கிவருகிறதென்றும், பொதுப்பயன்பாட்டிற்கான இடம் ஒதுக்கப்படவில்லையென்றும், மேற்படி கட்டிடங்களுக்கு சுமார் 9 ஆண்டுகளாக சொத்துவரி, தொழில்வரி, செலுத்தப்படவில்லையென்றும் குறிப்பிட்டு அரசு விதிமுறைகளைப் பின்பற்றாமலும் விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்ட மேற்படி கல்வி நிறுவன கட்டிடங்களை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரரின் புகார் குறித்து பரவை தேர்வுநிலை பேரூராட்சி அலுவலர் தமது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட மேற்படி கல்வி நிறுவனங்களை தலஆய்வு மேற்கொண்டு 2021–2022 முதல் 2023–2024 வரையுள்ள காலங்களுக்கு ரூ. 23,23,825/– சொத்துவரி செலுத்த அறிவுறுத்தி 24.05.2023ல் அறிவிப்பு வழங்கப்பட்டதென்றும் டெல்லி பப்ளிக்பள்ளி நிர்வாகத்திற்கு 2022–2023 முதல் 2023–2024 வரை ரூ. 6,76,916/– சொத்துவரி செலுத்தக்கோரி 13.06.2023 நாளிட்ட அறிவிப்பு

வழங்கபட்டுள்ளதென்றும் இரண்டுமாதகால அவகாசத்திற்குள் மேற்கண்ட தொகை வசூல் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பரவை தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தின்படி, மனுதாரர் தமது 27.04.2023 நாளிட்ட புகார் மனுவில் இவ்வாறான அரசு நிதியிழப்புகளைக் குறிப்பிட்டும், வரைபட அனுமதி இல்லாமல் முறைகேடாக கட்டப்பட்ட கட்டங்கள் மீது உரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்கக் கோரியும் புகார் அளிக்கும் வரை இந்நேர்வுகளில் பேரூராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது.

மேலும் மனுதாரர் தமது மனுவில் மேற்படி கல்வி நிறுவனங்கள் பேரூராட்சிக்கு சுமார் 9 ஆண்டுகள் சொத்துவரி செலுத்தாமல் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் பரவை பேரூராட்சி செயல் அலுவலர் 2021–2022 முதல் 2023–2024 ஆண்டுகளுக்கு மட்டும் சொத்துவரி விதிப்பு கோரும் அறிவிப்பு அளித்துள்ளார். மேற்கண்ட அறிக்கையில் கடந்த 2014 முதல் 9 ஆண்டு காலத்திற்கு வரி வசூல் செய்த விவரங்களை அறிய முடியவில்லை. சொத்துவரி விவரங்களை முறையாக இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்காதது பேரூராட்சி செயல் அலுவலரின் மெத்தனப் போக்கையே காட்டுகிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. எனவே மேற்படி கல்வி நிறுவனங்கள் எந்த ஆண்டிலிருந்து செயல்படுகின்றன என்பதை செயல் அலுவலர் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் இந்நேர்வில் 24.05.2023 மற்றும் 13.06.2023 ஆகிய நாளிட்ட அறிவிப்புகளில் குறிப்பிட்டபடி தொழில்வரியை வசூலிக்கவும் முறையான கட்டட வரைபட அனுமதிபெறாமல் கல்லூரி மற்றும் பள்ளிக்கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பின், உரிய விதிகளின்படி Lock and seal அறிவிப்பு மற்றும் De-Occupation தாக்கீதுகளை வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பரவை தேர்வு நிலைப் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும் மேற்படி கல்லூரி மற்றும் பள்ளிக்கட்டங்கள் முறைப்படி கட்டட அனுமதிபெறப்பட்டு அதன்படியே கட்டங்கள் கட்டப்பட்டுள்ளதா என்பதனை ஆய்வு செய்திட பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் நிலையில் பொறியாளர் ஒருவரை நியமித்து கட்டட அனுமதி வாங்கப்பட்டதற்கும், கட்டப்பட்டுள்ள கட்டடங்களை ஒப்பீடு செய்தும், மேற்கண்ட பள்ளி, கல்லூரிகளில் வாகனங்கள் நிறுத்துமிடம் (Parking space) முறையாக விடப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்து விரிவான அறிக்கையை 30 நாட்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறும் பேரூராட்களின் இயக்குநர் அவர்களை அறிவுறுத்தலாமென முடிவு செய்து அவ்வாறே இம்முறை மன்றம் ஆணையிடுகிறது. இதில் விதி மீறல்கள் ஏதும் அறிக்கையில் தெரிவிக்கும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Director of Town Panchayat is directed to ensure the following:

(i) Property Tax, Professional Tax etc. should be calculated and recovered from the educational institutions dealt with in the petition Loss of Revenue to the local body because of the indifference and inaction on the part of the Town Panchayat Executive officer concerned, including the field officials is condemned by this Forum.

(ii) The buildings constructed by the institutions should be measured appropriately with reference to the planning permission issued and if any

deviations are detected rigorous action as per the Town and Country Planning Act provisions should be initiated with immediate effect

(iii) Severe disciplinary action should be launched against all the Executive officers and other officials involved in this scam of lack of supervision and action as per the Town & Country Planning Act and the Town Panchayat rules and regulations besides collusion with the erring institutions by the official machinery. The officials who caused loss of revenue to the exchequer of the Town Panchayat for so many years should be charge sheeted deterrently. A detailed action taken report should be sent to this Forum in the next 30 days.

A copy of this orders is being sent to the Government in Municipal Administration and Water Supply Department for information.

2023–ஆம் ஆண்டு, ஜுலை 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1) திரு. இரா. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்திநகர், மதுரை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
பரவை தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

14/7/23
உதவிப்பதிவாளர்